Source: *Tamil Murasu*, p3
Date: 13 November 2018

# தானியங்கி பேருந்து சோதனை

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் கெண்ட் ரிட்ஜ் வளாகத்தில் ஓட்டுநர் இல்லாத இடைவழிப் பேருந்துச் சேவை 2019 மார்ச் முதல் பரிசோதிக்கப்படும் என்று கம்ஃபர்ட்டெல்குரோ நிறுவனம் தெரிவித்து இருக்கிறது.

இந்த நிறுவனத்தின் துணை நிறுவனமான கம்ஃபர்ட்டெல்குரோ பஸ் என்ற நிறுவனம், ஓராண்டு காலம் இடம்பெறும் அந்தப் பரிசோதனையில் EasyMile EZ10 என்ற ஓட்டுநர் இல்லாத வாகனத்தைச் சோதித்துப் பார்க்கும்.

அந்தப் பேருந்து தொடக்கத்தில் பயணிகளை ஏற்றிச்செல்லாது.

பயணிகளை ஏற்றிச்செல்லலாம் என்று பரிசோதனைக் குழு அனுமதி கொடுத்ததும் அதில் பலரும் பயணம் செய்யலாம். பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் பேருந்து சாலையில் இதர வாகனங்களுடன் சேர்ந்து சேவை வழங்கக்கூடிய ஒன்று என்று தெரிவிக்கப்பட்டது.

ஓர் இடைவழிப் பேருந்து 15 பேரை ஏற்றிக்கொண்டு பல்கலைக் கழகத்தின் வளாகத்தில் 1.6 கி.மீ. தொலைவுக்குப் பயணம் செய்யும்.




கம்ஃபர்ட்டெல்குரோ நிறுவனம் ஓட்டுநரில்லாத இடைவழிப் பேருந்தை ஓராண்டு காலம் சோதித்துப் பார்க்கும். **படம்: கம்ஃபர்ட்டெல்குரோ**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.